18th April 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : ஜப்பானிலிருந்து, சிறு கைத்தொழில்கள் இங்கு ஆரம்பம் செய்வதற்கு நமது அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டதா ? அப்படியானால் அதைப் பற்றிய விவரங்களை அறிவிக்க முடியுமா ? அல்லது மத்திய அரசாங்கமாவது இது பற்றி ஏதாவது நமக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஜப்பானிலிருந்து வந்த டெலிகேஷன் நமது ராஜ்யத்தில், இந்திய நாட்டிலும் சிறு கைத் தொழில்கள் எந்த முறையில் நடக்கிறது என்பது பற்றி அவர்கள் கண்டு ஆராயவும் அதற்கு மேற்கொண்டு ஏதாவது விருத்தி செய்வதற்கான சிபார்சுகள் செய்வதற்காகத்தான் வந்தது. கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த ரிப்போர்ட்டை படித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கிண்டி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் நன்றாக இருக்கிறது. சிறந்த முறையில் இருப்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் இங்கு தொழில் செய்வதற்கு உதவி புரிவதற்காக வந்தவர்கள் அல்ல. ஆலோசனை கூறுவதற்காக வந்தவர்கள்.

State Labour Advisory Board

* 717 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of the House a copy of the resolutions passed at the meeting of the State Labour Advisory Board held on 12th and 13th December 1958 together with a statement showing the action taken by the Government on those resolutions ?

THE HON. SRI R. VENKATARAMAN : A paper [a] furnishing the information is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய பதிலிலிருந்து தொழிற்சங்கம் அங்கீகரிக்கப்பட்டது தவிர, கோர்ட் ஆப் டிசிப்ளினையும் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம். லேபர் கமிஷனர், ஷாப்ஸ் அண்ட் எஸ்டாப்லிஸ்மெண்ட்ஸ் ஆக்ட் 51—வது விதி எலெக்ட்ரிசிடி போர்ட் தொழிலாளர்களுக்கு செல்லும் என்று சொல்லியும் அதை எதிர்த்து எலெக்ட்ரிஸிட்டி போர்ட் ஏன் ஹைகோர்ட்டுக்கு ரிட்டிற்குச் செல்ல வேண்டும். இது, அந்தக் கோர்டிற்கு விரோதம் அல்லவா ?

THE HON. SRI R. VENKATARAMAN: This question has to be addressed to my colleague in charge of Electricity.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டில் கூடுமானவரையில் அமுல் நடத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையில் ஏதாவது அமுல்படுத்தப் பட்டிருக்கிறதா ? அல்லது முயற்சி இருக்கிறதா ? அதை அமுல் நடத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்களை நான் கேட்கிறேன், இதுவரையில் அமுல் நடத்தப்படவில்லையானால் எங்கே நடத்தப்படவில்லை என்பது பற்றி விவரம் கொடுக்கும்படியாக.

Compensation to ex-Zamindars

* 718 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) when the interim payments of compensation amount for fasli 1367 payable to the ex-zamindars were sanctioned by the Government ;

---

[a] Printed as Appendix on pages 236–239 infra.